உ

சிவமயம்

கண்ணகையின் கருணையால்

உருவாகிய

# சிறுபிள்ளைத்தாலாட்டு



வெளியீடு: மகிழடியான்பதி திருத்தொண்டர்

2007
231.08 CIR
STACKS
111480


உ
சிவமயம்

நாவற்குளி மகிழடியான்பதி நாகமலே வேம்படியில் திருவாய்மலர்ந்து கோயில் கொண்டெழுந்தருளிய வளக்கால் கண்ணகை அம்மன் திருப்பணி நிதிக்காக நிதி உதவிய அடியார்கள்! அன்பர்கள்! தொண்டர்கள்!! அம்மையப்பன் திருவருளால் அடையும் பேறும் ஆலயத் திருப்பணி செய்வதினுல் கிடைக்கும் பலனும் ''புல்லினுல் வருடம் கோடி புதுமண்ணுல் நூறுகோடி, துல்லிய செங்கல்லாலே தூய முன்னூறு கோடி அல்லியங் கோதே கேளாய் அருத்தரும் ஆலயங்கள் கல்லினுல் அமைத்த பேர்கள் கைலேவை குந்தம் மீந்தார்''

மகிழடியான்பதி உரிமையாளன்
**கந்தையா சரவணமுத்து**
மகிழடியான்பதி நாவற்குளி

உ

சிவமயம்



111480

சீரார் மிகுந்த சிறுபிள்ளைத் தாலாட்டை
பாரார் மகிழ்ந்திடவே பாடினன்-கயிலாயமாலை
போற்றும் தேவராஜேந்திரச் செம்மல்வழி
சாற்றும் சரவணனும் தேவி திருப்பணிக்கேயிசை

உ

சிவமயம்

சிவநேயச் செல்வர்களே ! மெய்யன்பர்களே !!
நாவற்குளி மகிழடியான்பதி நாகமலை
வேம்படியில் திருவாய் மலர்ந்து கோயில்
கொண்டெழுந்தருளிய வளக்கான் கண்ணகைப்
பதியின் திருப்பணிநிதிக்காகத் தேவியருளால்
மலர்ந்து வெளிவந்த சிறுபிள்ளைத் தாலாட்டை
அன்பொடுபெற்று இயன்ற காணிக்கை உதவி
அம்மையப்பனின் திருவருளால் சகலசெல்வங்
களையும் சந்தான பாக்கியத்தையும் நோயற்ற
வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும்
பெற்று அடியார்கள் பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

இங்ஙனம்

மகிழடியான்பதி உரிமையாளன்
தொண்டன் க. சரவணமுத்து

உ

சிவமயம்

# சிறுபிள்ளைத்தாலாட்டு

## — வெண்பா —

சீரான்மிகுந்த சிறுபிள்ளைத்தாலாட்டு
பாரார்மகிழ்ந்திடவே பாடுதற்கு — நீராரும்
வேணியான்றன்னருளை வைத்துவிளையாடுகின்ற
ஆனைமுகன்றாளே யரண்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
சீராரு மெங்கள்குல சிகாமணியே ஆராரோ,

கண்ணே நவமணியே
கற்பகமே முக்கனியே
என்னுர் உயிரான
இந்திரனே கண்வளராய். 1

STACKS

கொட்டி வைத்தமுத்தே
குவிந்தநவ ரத்தினமே
கட்டிப்பசும் பொன்னேஎன்
கண்மணியே நித்திரைசெய். 2

நித்திரைசெய் நித்திரைசெய்
நெடியபுவி மன்னவனே
சித்திரப்பூந் தொட்டிலிலே
சிகாமணியே நித்திரைசெய். 3

கரும்புரசமே என்
கசக்காத முக்கனியே
அரும்பாமலர்மணமே
அருமகனே கண்வளராய். 4

மாற்றுயர்ந்த பொன்னே இந்த
மண்டலத்து அதிபதிபதியே
பூத்தபுதுமலரே என்
பொக்கிஷமே கண்வளராய். 5

மருவேமருக் கொழுந்தே
மலர்விரிந்த மல்லிகையே
குருவே ரம்பேஎன்
குலக்கொழுந்தே கண்வளராய். 6

கிள்ளைக்குயில் மொழியேநான்
கண்டெடுத்த பொக்கிஷமே
பிள்ளைக்கலி தீர்க்கவந்த
பெருமானே கண்வளரரய். 7

மாயன் மகளார்க்கு
மாப்பிள்ளையாநீ வந்தவனோ
தாய்சொல் தவறாத
தனஞ்செயனார் நீதானோ. 8

சீதைக்கதி பதியோ.
சிலையேந்தும் ரகுபதியே
தந்தைசொல் தட்டாதே
தருமதுரை நீதானோ. 9

ஒரு. மாங்கனிக்காக
உலகவலம் செய்துவந்த
பெருமாள் மருமகனோ
பெண்ரதிக்கு மாப்பிள்ளையோ. 10

கருப்புக் கணையானோ
கன்னிவள்ளி நாயகனோ
பரமன்றனை யடித்த
பாண்டியனார் நீதானோ. 11

ஆரடித்து நீயழுதாய்
அழுதகண்ணில் நீர்தழும்ப
பெயரையுரைத் தாக்கால்
பெருவிலங்கு பூட்டிடுவேன். 12

அத்தையடித்தாளோ உனக்கு
அமுதூட்டும் கையாலே
சற்றேமனம் பொறுத்துச்
சந்திரனே கண்வளராய். 13

பாட்டியடித்தாளோ உன்னை
பால்வார்க்குங் கையாலே
கூப்பிட்டு நான்கேட்பேன்
குஞ்சரமே கண்வளராய். 14

மாமியடித்தாளோ உன்னை
மைதீட்டுங் கையாலே
சாமிமனம் பொறுத்து
சண்முகனே கண்வளராய் 15

தாதியடித்தாளோ உன்னை
தயிரூட்டும் கையாலே
நிமிஷம் மனம்பொறுத்து
நித்திரைசெய் கோமானே 16

அக்காளடித்தாளோ உங்கள்
அம்மான்மார் வைதாரோ
அதற்காகத் தேம்புவதேன்
வித்தகனே கண்வளராய். 17

பெரிய தப்பிதமோ உன்னை
பெற்றாளடித்த துண்டோ
அறியாமல் செய்தாலும் எங்கள்
ஆரமுதே கண்வளராய். 18

அழாதே அழாதே எங்கள்
அரசே அழாதே நீ
தொழுவார் மலரிருக்க
துரையேநீ கண்வளராய். 19

ஆம்பல் மலர்போலே
அடிக்கநீ வாய்திறந்து
தேம்பி யழாதேநீ
தினகரனே கண்வளராய் 20

நீராட்டி மைதீட்டி
நிலாக்காட்டி பொட்டுமிட்டு
சீராட்டும் வேளையல்லோ
சித்தஜனே கண்வளராய் 21

அந்திநிலாக்காட்டி உனக்கு
அமுதூட்ட வேணுமல்லோ
மைந்தன் கலிதீர்த்த
மந்திரியே கண்வளராய் 22

வாடாதே பூவே
வானுலகின் தாராவே
தேடாதபொன்னே என்
திரவியமே கண்வளராய் 23

துறைமுகத்து வியாபாரி
துரைமார்கள் உங்களம்மான்
திரவியங்க ளெண்கோடி
தேடிவைப்பார் கண்வளராய் 24

கப்பத்துரை முகத்தார்
கனசாலி உங்களம்மான்
பொற்பணிகள் கொண்டுவந்தார்
புண்ணியனே கண்வளராய் 25

கோட்டையதிகாரி குளந்தைநீபாராய்
கொடிகார ருங்களம்மான் நீ
கேட்டதெல்லாம் தான்தருவார்
கிளிமொழியே கண்வளராய் 26

ஆனைவிற்கும் வர்த்தகர்கள்
அதிகாரர் உங்களம்மான்
சேனைத்தலைவரதோ உங்கள்
சின்னண்ணு வந்தார்காண் 27

பட்டுஜவுளிகளும் உனக்கு
பலபணியும் கொண்டுவந்தார்
கட்டியலங் கரிப்பார்
கற்பகமே கண்வளராய் 28

கோட்டைப் புதுலேஞ்சி
கொடிமதுரைப் பட்டுகளும்
பாட்டனூர் கொண்டுவந்தார்
பாக்கியமே கண்வளராய் 29

பொம்பாயிப் பட்டுனக்கு
புதுக்கோட்டை லேஞ்சிகளும்
அம்மான்மார் கொண்டுவந்தார்
அணுப்பொழுது கண்வளராய் 30

பொன்னு லெழுத்தாணி
பட்டோலைப் புத்தகமும்
சின்னண்ணு கொண்டுவந்தார்
சிறுபொழுது கண்வளராய் 31

சோமனொளிபோலே
சோதிமிகும் பாதரசம்
மாமனூர் கொண்டுவந்தார்
மதிபதியே கண்வளராய் 32

மின்னற் கொடிபோலே
மாற்றுயர்ந்த பொன்னரைஞாண்
அண்ணு ரளிப்பார்காண்
அர்ச்சுனனே கண்வளராய் 33

சின்னஞ் சிறுவிரற்கு
சித்திரம்போல் மோதிரங்கள்
பொன்னாலுனக் களிப்பார்
புரந்தரனே கண்வளராய் 34

பாங்கிமார்கையேந்தி உனக்கு
பணிபூட்டத் தாலாட்டி
தாங்கிப்பால் கொடுப்பார்
தனஞ்செயனே கண்வளராய் 35

வைஞ்சிமார் கையேந்தி
வகைவகையாய்த் தாலாட்டி
கொஞ்சிப்பால் கொடுப்பார்
குமரேசா கண்வளராய் 36

வட்டக் கலசமது
வாய்நிரம்பப் பாலருந்தி
இட்டசிறு தொட்டிலிலே
இந்திரனே கண்வளராய் 37

தந்தைமனங்குளிர உன்
தந்தையார் சீராட்ட
மைந்தன் கலிதீர்த்த
மன்னவனே கண்வளராய் 38

முற்றிற்று



# மகிழடியான் திருப்பாதம்

## போற்றி போற்றி

திருவள்ளுவர் அச்சகம் நல்லூர், யாழ்ப்பாணம்